Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

113

நகர் ஊரமைப்புத்துறை

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம்

மண்டல உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் - திருமதி. க. உமாராணி, பி.இ.,

ந.க.எண்.3163/2019/ திம 1 நாள்.21 .01.2020.

பொருள் : மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு துறை – திருப்பூர் மண்டலம் திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டை வட்டம் - உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கண்ணமநாயக்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள். .833/1A,833/1B2, 833/1C1-ல் 3.94 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை : 1. இணையதள விண்ணப்பம் எண். 201900601010164. நாள்10.01.2019.

2. தனி அலுவலர் கண்ணமநாயக்கனூர் ஊராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண்.2670/2019/ஆ1, நாள். 26.10.2018.

3.மனுதாரர் திரு U.R.அப்பாவு மற்றும் A.சீனிவாசன் ஆகியோரது விண்ணப்பம் நாள். இல்லை மற்றும் இணைப்புகள் (இவ்வலுவலகத்திற்கு பெறப்பட்ட நாள்.21.11.2019).

4.அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சி துறை, நாள் 16.06.2003

5.அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.04.02.2019.

6. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3), நாள்.4.05.2017.

7.நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13753/2018 எல்ஏ2, நாள்.16.08.2018.

8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை, ந.க.எண். 13686/2017/எல்ஏ-2, நாள். 08.09.2017.

9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது கடிதம், ந.க.எண். 12201/2017/சிபி, நாள். 28.09.2017.

10. தனி அலுவலர், கண்ணமநாயக்கனூர் ஊராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண். 2781/2019/ஆ1 நாள்.18.10.2020 (சாலை பகுதிகள், பூங்கா மற்றும் பொது உபயோகம் - ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திர ஆவண எண்.8881/2019 நாள்.17.10.2019).

11. தான ஆவண எண்.9026/2019/ நாள்.23.10.2019 (TANGEDCO -ற்கு ஒப்படைக்கப்பட்டது).

12. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய நாள்.03.01.2020.

------0-------

உத்தரவு

திருப்பூர் மண்டலம், திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டை வட்டம் - உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கண்ணமநாயக்கனூர் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள். .833/1A,833/1B2, 833/1C1-ல் 3.94 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ(திம) எண்.07/*2019*** என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் வழங்கப்படுகிறது.

மேற்படி, உத்தேச மனைப்பிரிவிற்கு பார்வை 5 ல் காண் அரசாணை மற்றும் ஊராட்சி கட்டிட விதிகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி, தனி அலுவலர், **கண்ணமநாயக்கனூர் ஊராட்சி** அவர்களிடம் இருந்து மனுதாரர் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறப்பு நிபந்தனைகள் :-

1) நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி முன்இசைவு அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப முன்இசைவு அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

2) சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3) பார்வை 7-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைப்பகுதிகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து, அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே, உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்".

4) பார்வை 8-ல் சுட்டியுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the real estate Project with the Real Estate Regulatory Authority".

5) புன்செய் விவசாய பகுதியிலிருந்து குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்தி மாற்ற நிலஉபயோக மாற்ற பயன்பாட்டிற்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017-ன் விதி-3ன்படி ரூ.1000/- பரிசீலனைக் கட்டணம், உள்ளாட்சியில் பெற்றும் விதி-9ன்படி 3% மனைப்பிரிவு மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் (market value)ல் கீழ்கண்ட அரசுக் கணக்குத் தலைப்பில் மனைப்பிரிவு விண்ணப்பதாரரிடமிருந்து பெற்று உள்ளாட்சியால் செலுத்தப்படவேண்டும். செலுத்திய விவரம் இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்கப்படவேண்டும்.

கணக்குத் தலைப்பு

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts.
AS Receipts under Land use conversion charges
27 Non Taxation fees – 09 collections
(DPC: 0217-60-800-AS-2790)

நிலப்பயன்மாற்றத்தொகை அரசுக்கு செலுத்திய பின்னரே நிலப்பயன்மாற்றமும் தொழில்நுட்ப முன் இசைவும் அமுலுக்கு வரும், அதன்பின்பே உள்ளாட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

6) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019, விதி எண்.47(11)-ன்படி, மனைப்பிரிவில் தேவைப்படும் சாலை, குடிநீர் வசதி, வடிகால் வசதி, கழிவுநீர் வசதி மற்றும் மின்சார வசதிகளை ஏற்படுத்துதல்/ மேம்படுத்தலுக்காக உள்ளாட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்படும் செலவுத்தொகையினை மனுதாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்,

மேற்படி சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

ஒ. உமாராணி 20/1/2020
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
திருப்பூர் மண்டலம்.
21/01/2020
22.1.2020

இணைப்பு -

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் -2
மனைப்பிரிவு நிபந்தனைகள் -2

பெறுநர்

தனி அலுவலர்,
கண்ணமநாயக்கனூர் ஊராட்சி,
உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
திருப்பூர் மாவட்டம்.

நகல்

மனுதாரர்,
திரு A.சீனிவாசன் மற்றும்
திருமதி A.ராஜலட்சுமி,
89, லட்சும் இல்லம்,
ஐஸ்வர்யா நகர்,
உடுமலைப்பேட்டை வட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

கண்ணமநாயக்கனூர் ஊராட்சி
தீர்மான நகல்

2020 ஆம் வருடம் ஜீன் மாதம் 17 ஆம் தேதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கண்ணமநாயக்கனூர் ஊராட்சியில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

முன்னிலை : திரு/திருமதி. K. சிலம்பம்மாள் தலைவர் அவர்கள் கண்ணமநாயக்கனூர் ஊராட்சி,

எண்	பொருள்	தீர்மானம்
4	திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கண்ணமநாயக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட கண்ணமநாயக்- கனூர் கிராமம் க.ச. எண் 833/1A. 833/1B2. 833/1C1-ல் மேம்பாட்டு திட்டம் பரப்பளவு 3.94 ஏக்கர் (ம) 15944.47 ச.மீ மொத்த மனைகள் : 77 (EWS மனைகள் உட்பட) EWS மனைகள் எண்கள் பரப்பு 45 to 62. 65 to 68 = 22 NOS = 1234.68 ச.மீ உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது மேம்பாட்டு சாலை பரப்பு : 4741.91 ச.மீ பூங்கா பரப்பு : 1141.58 ச.மீ பொது உபயோகம் : 69.15 ச.மீ குடிநீர் உந்து மற்றும் மின் மாற்றி கட்டிடத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது மின் பகிர்மானம் (TANGEDCO) : 91.22 ச.மீ நில உரிமையாளர் உரிமை பெற்றவர் திருப்பூர் மாவட்டம் மாவட்ட உதவி பெற்றோர் அவர்களின் ஒப்புதலை தெரிவிப்பது A. சிவமணி A. ராமலிங்கம் உடுமலைப்பேட்டை	தீர்மான எண் : நாள் : ஒப்பம்(.....................)

/ உண்மைநகல் /

கண்ணமநாயக்கனூர் ஊராட்சி

கண்ணமநாயக்கனூர் ஊராட்சி
தீர்மான நகல்

2013 ஆம் வருடம் மாதம் ஆம் தேதி கிழமை
முற்பகல் மணிக்கு கண்ணமநாயக்கனூர் ஊராட்சியில் நடைபெற்ற
கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

முன்னிலை : திரு/திருமதி. தலைவர் அவர்கள் கண்ணமநாயக்கனூர் ஊராட்சி,

எண்	பொருள்	தீர்மானம்
	மனைப்பிரிவு வளர்ச்சிக் கட்டணம் மற்றும் அங்கீகாரக் கம்பத்துடன் லைட் ப்ளாட் அனுமதி கட்டணமாகவும் தொகை ரூ: 24,8000/- 16.06.2020 அன்று செலுத்தப்பட்டுள்ளது என்பதை மன்றம் அங்கீகாரம் வேண்டல்	தீர்மான எண் : 39/2020 நாள் : 17.06.2020 மன்றம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது
	/ உண்மைநகல் /	ஒப்பம்(XXXXXXXX) K.கருப்பம்மாள், தலைவர், கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் கண்ணமநாயக்கனூர் ஊராட்சி

K. கருப்பம்மாள்
தலைவர்
கண்ணமநாயக்கனூர் ஊராட்சி,
உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate